


ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122





Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 4 பக்கம் | 4.3.2026 புதன்கிழமை

## தர்மம் நிறை அய்யா ஸ்ரீ வைகுண்டரின் 194-வது அவதார தின விழா

# 1000 நபர்களுக்கு அன்னதானம்

## நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா

சென்னை, மார்ச் 4: தர்மம் நிறை அய்யா ஸ்ரீ வைகுண்டரின் 194-வது அவதார தின விழா முன்னிட்டு 1000 நபர்களுக்கு அன்னதானம் மற்றும் நலதிட்ட உதவிகளை இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை எம்.ஜி.ஆர்.நகர் வியா பாரிகள் சங்க கட்டிடம் அருகில், நடைபெறுகிறது.



இவ்விழாவிற்கு N.ஜெயசிங் தலைமை தாங்குகிறார். G.மைக் கேல்ராஜ் வரவேற் புரை நிகழ்த்து கிறார்.

A.D.ராஜா, E.ரவி, A.சேர்மன், L.சிவ முருகன், A.ராஜ்குமார், B.தாமரை கண்ணன், ஐயா ராமகிருஷ்ண பெரு மாள், R.ஜெயபிரகாஷ், V.தென்னரசு, L.சிவமணிகண்டன், K.சுப்பிரமணி யன், M.கோயில்ராஜ், D.பன்னீர் செல்வம், S.P.சாந்தமூர்த்தி, S. சிமோன், R.சுந்தர்ராஜன், வழக்க றிஞர் பாஸ்கர், M.தில்லைபாண்டி, A.P.ராமமூர்த்தி, K.முகம்மதுசேட்,

டாக்டர் சுந்தரலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

R.அருண்குமார், P.செல்வம், D.கன கராஜ், S.தங்கவேல், S.கோதண் டராமன், C.வடிவேல், E.பெரு மாள், R.லட்சுமணன், J.சர வணன், G.ஐசக், S.M.மணிகண் டன், S.முருகன், S.பாபு, A. பழனி, தமிழ்செல்வன், P. கண்ணன், S.சந்திரசேகர், P. தர்மசந்த், G.அண்ணாமலை, P.சேகர், L.ராஜேஷ், S.P.முருகே சன், E.அஜ்மீர்அலி, K. அணில்குமார், N.திருமால், I.ஜேம்ஸ், R.ஆறுமுகநயினார், P.பொன்னுசாமி, M.A.குபேர், P.காளிதாஸ், C.முத்துசெல் வன், A.மணி, P.முரளி, M. பழனி, K.K.K.தட்சிணாமூர்த்தி, N. சாமிதுரை, A.சுந்தர், N.சுயம்புதுரை, K.ஜெயகுமார், T.அந்தோணிராஜ், J.சார்லஸ், T.முத்துபாண்டியன், M.மரியகிறிஸ்டோபர்



S.முத்துசாமி, S.இளங்கோ, S.ஆறு முகம், P.நாராயணன், N.N.P.முருகன், M.விஸ்வநாதன் ஆகியோர் விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக் கிறார்கள்.

A.M.V.பிரபாகர்ராஜா விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், K.கண்ணன் 138வது மாமன்ற உறுப்பினர், M.R.பன்னீர்செல்வம் மாவட்ட தலைவர், தென்சென்னை மேற்கு மாவட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு

Y.எட்வர்ட் மாவட்ட தலைவர், தென்சென்னை வடக்கு மாவட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, U.நடராஜன் மாநில இணைசெயலாளர் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் நலதிட்ட உதவிகளை வழங்குகின்றனர். A.கென்னடி பாஸ்கர் , S.பால்பாண்டியன், S. ஹாஜா மொய்தீன், B.பிரேம்சந்த், டாக்டர் ஜாகீர்உசேன், M.செந்தில் ரூபன் ஆகியோர் அன்னதானம் வழங்குகிறார்கள். N.N.P.பன் னீர் செல்வம், S.P.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்கிறார் கள். R.S.பாண்டியன் நன்றியுரை வழங்குகிறார்.



# ஊர்ப்புற நூலகர்களை பணி நிரந்தரம் செய்யாதது திமுக அரசின் பெருங்கொடுமை: சீமான்

சென்னை, மார்ச் 4: 'ஊர்ப்புற நூலகர்களைப் பணி நிரந்தரம் செய்து, உரிய ஊதிய உயர்வு வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளி யிட வேண்டும். ஊர்ப்புற நூலகர் களுக்கு அதிமுக அரசு செய்த அதே துரோகத்தை திமுக அரசும் செய்துவருவதுபெருங்கொடு மையாகும்' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில், 'கிராமப்புற நூல கங்களில் பணியாற்றி வரும் ஊர்ப் புற நூலகர்களைப் பணி நிரந் தரம் செய்யாமலும், உரிய ஊதியம் வழங்காமலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஏமாற்றி வருவது வன்மை யான கண்டனத்திற்குரியது. ஊர்ப்புற நூலகர்களில் பெரும் பாலானோர் மாற் றுத் திறனாளிகள் மற்றும் பெண்களாக உள்ள நிலை யில், அவர்களுக்கு நியாய மாக கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்து, அவர் களைப் பல ஆண்டுகளாக அலைக் கழிப்பது என்பது மிகுந்த மன வேதனை அளிக் கிறது. தமிழ்நாடு முழுவதும் கிராமப் புறங்களில் இயங்கிவரும் நூலகங் களில் கடந்த 2008-ஆம் ஆண்டு முதல் 17 ஆண்டுகளாக, ஏறத் தாழ 1,512 நூலகர்கள் பணியாற்றி வரு கின்றனர்.



அவர்கள் அனை வரும் தங் களை, தற்போதுள்ள சிறப்பு காலமுறை ஊதியத் திலிருந்து, காலமுறை ஊதியத்திற்கு மாற் றிப் பணி நிரந்தரம் செய்யுமாறும், உரிய ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஆகியவற்றை வழங்கிடுமாறும் கோரி, கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு போராட்டங் களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால், முந்தைய அதிமுக அரசு அவர்களது நியாயமான கோரிக் கைகளை நிறைவேற் றாமல் ஏமாற்றி வயிற்றில் அடித்தது. ஊர்ப்புற நூல கர் களுக்கு அதிமுக அரசு செய்த அதே துரோகத்தை திமுக அரசும் செய்து வருவது பெருங்கொடுமை யாகும்.

ஊர்ப்புற நூலகர்கள் கடந்த 17 ஆண்டுகளாகப் பணியாற்றியும்கூட, இதுவரை பணி நிரந்தரம் செய்யப்ப டாததால் அவர்கள் அரசு ஊழியர் களாகக் கருதப்படுவ தில்லை. இத னால் அரசு ஊழி யர்களுக்குக் கிடைக்கக் கூடிய விழாக்கால ஊக்கத் தொகை, பணிக்கொடை, பணப்பலன், உரிய ஓய்வூதியம், மருத்துவக் காப்பீடு ஆகியவை ஊர்ப்புற நூலகர்களுக்கு கிடைக்கப் பெறாமல் தவித்து வருகின்றனர்.

ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படு கின்றன என்ற பொன் மொழிக்கு ஏற்ப, அறிவை வளர்க்கும் அரும் பணியில் ஈடுபட்டு வரும் நூலகர் பெருமக்களை வறுமையில் வாட விடுவதும், அடிப்படை உரிமை கேட்டு வீதியில் இறங்கிப் போராட விடுவதும் எவ்வகையிலும் ஏற்புடை யதல்ல.

உள்ளாட்சித் துறை சொத்து வரியில் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு 2% ஆக இருந்த சொத்துவரி தற்போது 10% ஆக உயர்த்தப் பட்டுள்ளது. சென்னையில் மட்டுமே சொத்துவரி ரூ.2,000 கோடியாக உள்ள நிலையில் அதில் நூலக வரி ரூ.200 கோடியாகும். இதே போன்று தமிழ்நாடு முழுவதும் மேலும் 1,000 கோடி ரூபாய் வருமானம் நூலகங்கள் மூலம் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்திடும் போதி லும், வெறும் 1500 நூலகர்களை பணி நிரந்தரம் செய்ய திமுக அரசு மறுப்பது, அறிவை வளர்க்கும் நூலகர் பெருமக்களின் வயிற்றில் அடிக்கும் செயலன்றி வேறென்ன?

ஒவ்வொரு மாவத்திலும் கலைஞர் நூலகம் அமைக்க தலா 500 கோடி ரூபாய் செல விடும் திமுக அரசு, கிராமப்புற கிளை நூலகங்களை தரம் உயரத்தாமலும், நூலகர் களுக்கு உரிய ஊதியம் வழங் காமலும் தொடர்ந்து ஏமாற்றி வருவது ஏன்? இதற்குப் பெயர் திராவிட மாடல் அல்ல கொடுங்கோன்மை மாடல்.

ஆகவே, தமிழ்நாடு அரசு ஊர்ப்புற நூலகர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்து உரிய ஊதியம் வழங்க அரசாணை வெளியிட வேண்டுமெனவும், அரசு ஊழியர் களுக்கு வழங்கும் அனைத்து உரிமை களும் நூலகர் பெருமக்களுக்கும் கிடைக்கவும் ஆவன செய்திட வேண்டுமெனவும் வலியுறுத்து கிறேன்' எனத் தெரிவித்தார்.











# இன்றைய பலன்கள்

## மேஷ ராசி பலன்

மேஷ ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று நம்முடைய வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் கொட்டி கிடக்கும். இன்று மற்றவர்களின் பேச்சு அல்லது கருத்துக்களால் மனதில் சில பாதிப்பு ஏற்படும். அதை கடந்து செல்வது நல்லது. பணியிடத்தில் உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். இன்று உங்களுடைய நிதி நிலைமை குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதால் எதிர்காலத்தில் உங்களுக்கு மிக சிறப்பான நன்மைகளை பெறலாம்.

## ரிஷப ராசி பலன்

ரிஷப ராசியை சேர்ந்தவர்களுக்கு இன்று தைரியம் மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் தொழிலில் மிகவும் கவனம் செலுத்தவும். இது உங்களுக்கு நல்ல லாபத்தை தரும். இன்று உங்களுக்கு கிடைக்கும் கூடுதல் வருமானம் சரியான இடத்தில் சேமிக்க முயற்சிக்கவும். புதிய விஷயங்களை கற்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இளைஞர்களுக்கு புதிய வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. எங்கள் செயல்பாடுகளால் சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். பணியிடத்தில் சில புதிய பொறுப்புகளை ஏற்க நேரிடும். சீக்கிரமான பிரச்சனைகளுக்கு தீர்வை காண்பீர்கள்.

## மிதுன ராசி பலன்

மிதுன ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று மற்றவர்களின் நலனை பற்றி சிந்தித்து மனப்பூர்வமாக அவர்களுக்கு சேவை செய்வீர்கள். இன்று உங்கள் தொழில் முன்னேற்றம் அடையும். புதிதாக ஒன்று தொடங்க முயற்சி எடுப்பீர்கள். இன்று பிறரின் யோசனைகள், ஆதரவை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம். இன்று உங்களுடைய சமூகத்தில் இன்று உங்களுடைய அந்தஸ்து மேம்படும்.இன்று உங்களுடைய வசதிகளை அதிகரிக்கும் விதத்தில் சில பொருட்களையும் வாங்க நினைப்பீர்கள். உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் உங்களுடைய உறவு மேம்படும்.

## கடக ராசி பலன்

கடக ராசி சேர்ந்தவர்களுக்கு ஒரு புதிய தொழிலை தொடங்க வாய்ப்பு உண்டு. ஆடை ஆபரணம் தொடர்பான தொழிலில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். சில நாட்களாக தடைபட்டு வந்து பணிகளை முடிக்க நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள். சொத்து வாங்குவது அல்லது விற்பது தொடர்பான முடிவுகளை மிகவும் கவனமாக எடுக்கவும். இன்று நீங்கள் பணம் செய்யவில்லை கவனமாக இருப்பது ஒரு முதலீடு செய்வதற்கு முன் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது அவசியம். குடும்ப சூழ்நிலை மேம்படுத்த யோசிக்கவும்.

## சிம்ம ராசி பலன்

சிம்ம ராசி சேர்ந்தவர்களுக்கு உங்களுடைய வேலையில் சிந்தித்து செயல்படவும். முடிந்த வரை பிறரின் ஆலோசனைகளை ஏற்பது அல்லது நீங்கள் ஆலோசனை கொடுப்பதை தவிர்க்கவும். இளைஞர்கள் புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவார்கள். காதல் உறவு மேம்படும். இந்த அர்ப்பணி பெண்ணும் செய்யக்கூடிய எந்த ஒரு வேலையும் எதிர்பார்த்த விதத்தில் முடியும். உங்களின் தொழில் நல்லது வியாபாரம் தொடர்பாக பண லாபம் அதிகரிக்கும்.இன்று நீங்கள் விநாயகரை வழிபாடு செய்து விட்டு முக்கிய வேலைகளை தொடங்கவும்.

## கன்னி ராசி பலன்

கன்னி ராசியை சேர்ந்தவர்களுக்கு உங்கள் நெருக்கமானவர்களின் ஆதரவால் முக்கிய வேலைகளில் வெற்றி கிடைக்கும். வெளியில் வெளிநாடு தொடர்பான தகவல் செய்யக்கூடிய நபர்களுக்கு லாபம் அதிகரிக்கும். வேலை தரக்கூடியவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். தொழிலை மேம்படுத்துவது தொடர்பான கடன் வாங்குவதில் நிதானம் தேவை. குடும்ப உறுப்பினர்களின் உடல்நலம் சற்று மோசமடைய வாய்ப்பு உண்டு. சொத்து சம்பந்தமான தகராறுகள் உங்கள் மன அமைதியை கெடுக்க வாய்ப்பு உண்டு. இன்று விஷ்ணு பகவானை வழிபாடு செய்யவும்.

## துலாம் ராசி பலன்

துலாம் ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்கள் மனநிலை மேம்படும். கடின உழைப்பின் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றிய அடைவீர்கள். இன்று உங்களுக்கு நிதிநிலைமை மேம்படுத்துவது தொடர்பான நல்ல செய்திகள் கிடைக்கும். சொத்து வாங்குவது அல்லது விற்பது தொடர்பான விஷயங்களை அதன் ஆவணங்களையும் மிகவும் கவனமாக ஆராய்வது அவசியம். பண செலவு தொடர்பான விஷயங்களில் கவனம் தேவை. இந்த காதல் விஷயங்களில் மகிழ்ச்சியான நாளாக இருக்கும். திருமணம் ஆன தம்பதிகள் சில அவசர முடிவுகள் கருத்து வேறுபாடுகள் சந்திக்க நேரிடும்.

## விருச்சிக ராசி பலன்

விருச்சிக ராசி சேர்ந்தவர்களுக்கு நீங்கள் எடுக்கும் எந்த ஒரு முடிவுகளும் நன்மை பயக்கும். கூடுதல் பணத்தை ரியல் எஸ்டேட் உள்ளது நிபுணர்களின் ஆலோசனையின் பெயரில் பங்கு சந்தையில் முதலீடு என சரியான இடத்தில் முதலீடு செய்ய முயற்சிக்கவும். இன்று நீங்கள் வேலை மாற்ற வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு ஏற்படலாம். அது தொடர்பான சில நல்ல வாய்ப்புகள் ஏற்படும். சில நபர்களின் தற்செயலான சந்திப்பு நல்லுறவுக்கு வழிவகுக்கும். நிலுவையில் உள்ள சில சட்ட பிரச்சனைகள், நீதிமன்ற வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

## தனுசு ராசி பலன்

தனுசு ராசி சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சியான நாளாக அமையும். இன்று திறமையாக உங்களுடைய பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் விளக்கங்களை அடைய வாய்ப்பு உண்டு. அரசாங்கத்திடமிருந்து குறிப்பிடத்தக்க நன்மைகள் கிடைக்கும். வியாபாரத்தில் நிதி முன்னேற்றம் அடைய கடினமாக உழைக்க வேண்டியது இருக்கும். இன்று யாராவது இருந்தாலும் உங்களிடம் மரவனுக்கு பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். இன்று நேர்மறை சிந்தனை உடன் செயல்பட வேண்டிய நாள்.

## மகர ராசி பலன்

மகரம் ராசி சேர்ந்தவர்களுக்கு வேலை உறுதியான பிடியுடன் செயல்படவும். தொடர்பாக எதிர்கொண்டு வரக்கூடிய சிக்கல் முடிவுக்கு வரும். அரசு நிறுவனங்களின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு அரசு சலுகைகள் பெற வாய்ப்பு உண்டு. வேலை இல்லாதவர்களுக்கு நீங்கள் விரும்பிய வாய்ப்புகளை பெறுபீர்கள். இன்று உங்களுடைய தொழில் அழிந்து வியாபாரம் தொடர்பாக போட்டியாளர்களால் தொந்தரவு ஏற்படாதுஏற்படுகிறது. பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படும். உங்களுடைய நேரம் அது சிந்தனை சூழலை முன்னேற்ற உதவும்.

## கும்ப ராசி பலன்

கும்ப ராசி சேர்ந்தவர்களுக்கு தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களிலும், புதிய விஷயங்களை கற்றுக் கொள்ளவும் ஆர்வம் காட்டுவீர்கள். இன்று உங்களுடைய நிதி நிலையை மேம்படுத்துவது தொடர்பாக புதிய முயற்சிகளை செய்யவும். சொத்து வாங்குவது அல்லது விற்பது தொடர்பான விஷயத்தில் சங்கடங்கள் ஏற்படலாம். வணிகர்கள் கூட்டணி அல்லது சங்கங்கள் மூலம் நல்ல லாபம் ஈட்டுவார்கள். இன்று உங்களுடைய தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீண்ட காலம் முதலீடுகளில் கவனம் செலுத்தவும்.

## மீன ராசி பலன்

மீன ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்கள் வேலை நல்லது குடும்ப பொறுப்புகளில் சில முக்கிய மாற்றங்களை சந்திப்பீர்கள். பணியிடத்தில் நீங்கள் விரும்பிய வெற்றியை பெற முடியும். நிதிநிலை திருப்தியாக இருக்கும். முதலீடு செய்வதற்கு முன்னால் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது அவசியம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடமிருந்து சில தொந்தரவுகளை சந்திக்க வாய்ப்பு உண்டு. மேலும் உங்கள் சகோதரிகள் உங்களை பலவீனப்படுத்த முயற்சிப்பார்கள். அதனால் செயல்பாடுகளில் திட்டமிடலும், கவனமும் தேவை.

# சட்டம் - ஒழுங்கு டிஜிபியை நியமிக்க முதல்வருக்கு நேரம் வரவில்லையா?

## வானதி சீனிவாசன் பேச்சு

சென்னை, மார்ச் 4: ‘கூட்டணி பேச்சு வார்த்தை, ஊருக்கு ஊர் மாநாடு செல்வதற்கு நேரம் இருக்கும் உங்களுக்கு, தமிழகத்துக்கு சட்டம் - ஒழுங்கு டிஜிபியை நிய மிக்க இன்னும் நேரம் வரவில்லையா?’ என நாங்குநேரி சம்பவம் குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘நெல்லை நாங்குநேரியில் நேற்று இரவு இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியளிக்கிறது. இதற்கு முன்னர் சாதிய தீண்டாமையால் நாங்குநேரி மாணவர் சின்னத்துரை பாதிக்கப்பட்ட சுவடுகள் மறைவதற்குள் அதே பகுதியில் மீண்டும் இப்படி ஒரு கொடூர செயல் அரங்கேறியிருப்பது சட்டம் - ஒழுங்கு எந்த அளவுக்கு சீரழிந்து உள்ளது என்பதைக் காட்டுகிறது. பொது மக்களுக்குப் பாதுகாப்பில்லாத, மக்கள் விரோத தீய சக்தி திமுக ஆட்சி என்பதை தினந்தோறும் நடக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. போகிற போக்கில் நடைபெறும் கொலைகளும், பெண்களுக்கு எதிரான குற்றங்களும், சாதியக் கொடுமைகளும் விடியா மாடல் திமுக ஆட்சியில் உச்சம் பெற்றுள்ளது.

காலை எழுந்தவுடன் இன்று என்ன அறிவிப்பை வெளியிடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் முதல்வரே, தமிழக மக்களுக்கு இதுபோன்ற துன்பங்களிலிருந்து எப்போது விடிவு பிறக்கும்?

கூட்டணி பேச்சு வார்த்தை, ஊருக்கு ஊர் மாநாடு செல்வதற்கு நேரம் இருக்கும் உங்களுக்கு, தமிழகத்துக்கு சட்டம் - ஒழுங்கு டிஜிபியை நியமிக்க இன்னும் நேரம் வரவில்லையா? அதுவரை தமிழகம் இன்னும் இதுபோன்ற எத்தனை குற்றச் செயல்களை பார்க்கப் போகிறதோ தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். படுகாயமடைந்தோர் விரைவில் குணம் பெற இறைவனை வேண்டுகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# முதல்வர் ஸ்டாலின் தூக்கத்தில் இருந்து எழுவாரா?

## எடப்பாடி பழனிசாமி, விஜய் கண்டனம்

சென்னை, மார்ச் 4: நாங்குநேரி கொலை சம்பவம் தமிழகத்தில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், தவெக தலைவர் விஜய் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



எடப்பாடி பழனிசாமி: நாங்குநேரி அருகே பெரும்பட்டு கிராமத்தில் அரங்கேறியுள்ள கொடூரம் ஏற்க முடியாத பெருங்குற்றம். பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் அந்த கிராமத்திற்குள் புகுந்த 9 பேர் கொண்ட மர்மகும்பல், அங்குள்ள தேநீர் கடை மீது பெட்ரோல் குண்டு வீசி நடத்திய கொலைவெறித் தாக்குதலில் இருவர் பரிதாபமாக உயிரிழந்து, 6 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டம் ஒழுங்கை ஒரு பொருட்டாக கருதாமல் விளம்பர ஆட்சி நடத்திய திமுக அரசின் அலட்சிய போக்கின் விளைவு தான் இந்த கொடூரக் கொலைகள். இது தங்கள் சமூகத்தைக் குறிவைத்து நடந்த தாக்குதல் எனவும், தங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அச்சத்துடன் போராடி வருகின்றனர் அக்கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின மக்கள். இதே நாங்குநேரி தொடங்கி, தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடக்கும் சமூக ரீதியான மோதல்களை தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது திமுக அரசு? வேடிக்கை மட்டும் தானே பார்த்துக் கொண்டு இருந்தது?

தொடர்ந்து இப்பகுதியை பதற்ற நிலையிலேயே வைத்திருக்க வேண்டுமென்பது தான் திமுக அரசின் எண்ணமா? தேர்தல் நேர அறுவடைக்கு சமூக மோதல்களை வளர்த்து விடுகிறதா திமுக? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் மக்களிடையே எழுகிறது. வாய்கிழிய மேடைகளில் சமத்துவம் என்று பேசும் திமுக, தனது ஆட்சியில் சமூக மோதல்களைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது; கடும் கண்டனத்திற்குரியது. பெரும்பட்டு தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவர் மீதும் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறோம்.

விஜய்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நேற்றிரவு இருசக்கர வாகனங்களில் சென்ற 9 பேர் கொண்ட கும்பல், சாலையில் சென்றவர்கள், டீக்கடை அருகே நின்றவர்கள் மீது ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் வெட்டுக் காயம் அடைந்தனர் என்று வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இந்தக் கொலை வெறித் தாக்குதல், கடும் கண்டனத்திற்கு உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய விழைகிறேன்.

உலக நாடுகளுடன் போட்டி போடும் ஓர் ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் எங்கே? இந்தியாவின் டாப் மாநிலத்தில் காவல் துறைக்குச் சட்டம் ஒழுங்கு டிஜிபி எங்கே? நம்பர்1 மாநிலம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆட்சியின் சட்டம் ஒழுங்கு லட்சணம் இது தானா? போதைக் கும்பல் சுதந்திரமாக வன்முறை நிகழ்த்த இடம் தந்த பொறுப்புமிக்க ஆட்சி இதுதானா?



















## பெரம்பலூர் சங்குபேட்டையில் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலில்

# மாசி மாதம் பௌர்ணமியையொட்டி சிறப்பு பூஜை, மற்றும் அன்னதானம்

பெரம்பலூர் , மார்ச் 4: பெரம்பலூர் டவுன் சங்குபேட்டையில் உள்ள அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருகோயில் மாசி மாதம் பௌர்ணமியை யொட்டி மாலை 6 மணிக்கு மகா தீபம் , மற்றும் சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் நடைப் பெற்றது.

விழாவையொட்டி நேற்று அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு சிறப்பு பூஜையில் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர் மாசி மாதம் வரும் பௌர்ணமியையொட்டி 19வது வார்டு சங்குபேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் திருகோயில் இத்திரு கோயிலில் மாசி மாதத்தில் வரும் பௌர்ணமியையொட்டி அம்மனுக்கு பால், தயிர், பன்னீர், சந்தனம், மஞ்சள், தேன், இளநீர், திருமஞ்சனம், ஜவ்வாது, உள்ளிட்ட வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து ஸ்ரீமுத்துமாரியம்மனை வன்ன மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்து சிறப்பு பூஜைகளுடன் மஹா தீபாராதனைகள் செய்து அம்மனை பெண்கள், மகளிர் குழுவினர். மற்றும் பொதுமக்கள் வழிபட்டனர். மாசி மாதம் 19-ம் தேதி வரும் பௌர்ணமியையொட்டி உலக நன்மைக்காகவும், பருவ மழை தவறாமல் பெய்து, தன தானியம் பெருகிடவும், பொதுமக்கள் நோய் நொடி இல்லாமல் இருக்க வேண்டி பொதுமக்கள் பிரார்த்தனை செய்தனர்.19 வார்டு அன்னதான குழுவினர் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு அபிஷேக பொருட்கள், மற்றும் அன்னதானம் ஏற்பாடு செய்திருந்தனர் .மாதம் தோறும் வரும் அம்மாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் தொடர்ந்து 2ம் ஆண்டு அன்னதானம் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடதக்கது. நிகழ்ச்சியினை 19 வார்டு அன்னதான குழுவினர் முன்னின்று நடத்தி வருகிறார்கள். விழாவில் ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயில் நிர்வாகி கண்ணபிரான், முக்கிய பிரமுகர்கள், மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



## சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில்,

# 23 மாவட்டங்களில் “திறனகம்” சிறப்பு மாவட்ட திறன் மையங்கள் திறப்பு

பெரம்பலூர் , மார்ச் 4: பெரம்பலூரில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (03.03.2026) சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில், 23 மாவட்டங்களில் “திறனகம்” - சிறப்பு மாவட்ட திறன் மையங்களை திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள திறனகத்தில் குத்துவிளக்கேற்றி பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2024-2025 சட்டப்பேரவை அறிவிப்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

திறனகம் என்பது ஒரே இடத்தில் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு ஆலோசனை, பயிற்சி இணைப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றை வழங்கும் ஒருங்கிணைந்த சேவை மையமாக செயல்படும்.



இம்மையங்கள் மாவட்ட ஆட்சித்தலைவரின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அலுவலர்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் (TNSDC) ஆதரவுடன் நிர்வகிக்கப்படுகின்றன. மாவட்ட தலைமையகங்களில் கணினி வசதி, குளிர்சாதன வசதி, உபகரணங்கள் மற்றும் பிற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் இம்மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் மாவட்ட திறன் மையத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான இலவச திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு ரூ.6 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது, நான் முதல்வன், வெற்றிநிச்சயம் திட்டத்தின் கீழ் படித்து முடித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் படிப்பை தொடர முடியாமல் இடையில் நிறுத்திய இளைஞர்களுக்கும் முற்றிலும் இலவசமாக திறன் பயிற்சி யுடன் கூடிய வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திறன் பயிற்சியில் சேர 18 முதல் 35 வயதுக்குட்பட்ட 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதியுடைய ஆண், பெண் இருபாலரும் தகுதியுடையவர்கள். தனியார் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள், அரசு துறைகள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள் வாயிலாக முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும் குறுகிய கால திறன் பயிற்சிகளாக 10 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி காலத்தில் ரூ.6 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது, எனவே விருப்பமுள்ள வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்கள் மற்றும் படிப்பினை தொடர முடியாமல் இடையில் நிறுத்திய இளைஞர்கள் tnskill என்ற வெற்றி நிச்சயம் திட்டத்திற்கான இணைய தளத்தில் அல்லது கூகுள் பிளே ஸ்டோரில் உள்ள வெற்றி நிச்சயம் செயலி வாயிலாக விருப்பமான திறன் பயிற்சியை தேர்வு செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

இலவச பயிற்சிகளில் சேர விரும்பும் இளைஞர்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்க விருப்பமுள்ள நிறுவனங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் முதல் தளத்தில் உள்ள மாவட்ட திறன் பயிற்சி மையத்தை (திறனகம்) நேரில் அணுகி பயன்பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், வெற்றி நிட்சயம், சிகரம் அறக்கட்டளை சார்பில், இளநிலை மென்பொருள் உருவாக்குநர் பயிற்சி முடித்த 10 நபர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, இந்திய இரயில்வே துறை போட்டித்தேர்விற்கு தயாராகும் வகையில் 10 நபர்களுக்கு வினா வங்கி தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் நகர் மன்ற துணைத்தலைவர் ஆதவன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சாகுல் ஹமீது, மாவட்ட திறன் அலுவலர் சுஜா தேவி இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் தமிழ் பாக்கியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Owned, Printer and Published by G.SASIREKA from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: V.S.N.SHARMA.